**OS**.**No**. 250/2017

**DW** 1- கோவிந்தராஜ் த/பெ. வெங்கடபதி

நாள். 21.02.2023

<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. அசல் வழக்கு எண் 250/17 ல் நான் இரண்டாவது பிரதிவாதி என்றால் ஆமாம். முதல் பிரதிவாதி என்னுடைய மனைவி என்றால் ஆமாம். இந்த வழக்கின் 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து 2008 ல் 3ம் பிரதிவாதி கூட்டாண்மை நிறுவனத்தை தொடங்கினார்கள் என்றால் ஆமாம். 2007 லிலேயே நானும் 2ம் வாதியும் பழனிசாமி, கனேஷ், செந்தில் மற்றும் நித்தியானந்தம் ஆகிய 6 பேரும் சேர்ந்து கூட்டாண்மை நிறுவனத்தை ஆரம்பித்துள்ளதாக சொல்லியுள்ளது பொய் என்றால் இல்லை. இந்த வழக்கின் 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து 2008 ல் ஆரம்பித்த 3ம் பிரதிவாதி கூட்டாண்மை நிறுவனத்தை கலைக்க கோரியும் 1.4.2012 க்கு பின்னிட்ட கணக்குகளை ஒப்படைக்க கோரியும் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம் .

2. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் நானும் இன்னும் 5 பேரும் சேர்ந்து 2007 லிலேயே கூட்டாண்மை நிறுவனம் ஆரம்பித்தாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். 2007 லிலேயே நானும் 2ம் வாதியும் பழனிசாமி ,கனேஷ் செந்தில் மற்றும் நித்தியானந்தம் ஆகிய 6 பேரும் சேர்ந்து தலா ருபாய் 6 லட்சம் வீதம் மொத்தம் ரூ30 லட்சம் முதலீடு செய்ததாக பிரமாண வாக்கு மூலத்தில சொல்லியுள்ளது சரியானது என்றால் சரியல்ல. இந்த விவரத்தை எனது எதிர் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நானும் 2 வாதியும் பள்ளி நண்பர்கள் என்றால் ஆமாம். பழனிசாமியும், கனேஷ்சும் திருப்பூர் தொழில் செய்து வருகிறார் என்றால் ஆமாம். பழனிசாமியும் கனேஷ்யையும் 2ம் வாதிக்கு தெரியும் என சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

3. 3ம் பிரதிவாதியின் கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாண்மை ஒப்பந்த பத்திரம் அசல் 2ம் வாதியிடம் உள்ளதாக சொல்லியுள்ளதும் பொய்யானது என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்கு மூலத்தில் நானும் என்னுடன் சேர்ந்து 6 பேரும்

2007 ல் ஏற்படுத்தியதாக கூறும் கூட்டாண்மை நிறுவனத்தை எந்த தேதியில் எந்த மாதம் ஆரம்பித்தோம் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ படித்துள்ளேன். தமிழும் ஆங்கிலமும் நன்கு தெரியும் என்றால் ஆங்கிலம் ஓரளவிற்கு தான் தெரியும் தமிழ் நன்கு தெரியும்.

4. நானும் என்னுடன் சேர்ந்து 6 பேரும் 2007 ல் ஆரம்பித்தாக கூறும் கூட்டாண்மை நிறுவனத்திற்கான ஒப்பந்த பத்திரம் தயார் செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். ஒப்பந்தம் என்னும் கூறும் நிலையில் மேல் சொன்ன 6 நபர்கள் கையொப்பம் இருக்கும் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2007 ல் பதிவு செய்துள்ளோம். அந்த பத்திரத்தை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. அவ்வாறு சேர்ந்து 6 பேரும் கையெழுத்து போட்டதாக சொல்லும ஆவணம் ஒவ்வொரு வரிடம் இருக்கும் என்றால் எனக்கு கொடுக்கவில்லை. அவ்வாறு 2007 ல் உண்மையிலேயே கூட்டாண்மை ஒப்பந்தம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும் ஏற்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. கூட்டாண்மை நிறுவனம் ஆரமிப்பதாக இருந்தால் நிறுவன பதிவாளரிடம் பதிவு செய்யப்படவேண்டும் என்றால் அது பற்றி தெரியவில்லை. கூட்டாண்மை நிறுவனம் குறித்து ஒரு கூட்டாண்மை ஒப்பந்தம் ஏற்படுத்தும் போது பதிவு செய்ய வேண்டிய அவசியம் என்றாலும் கூட்டாண்மை ஒப்பந்தில் உள்ள தரப்பினர் ஒவ்வொரும் தெரிந்து இருக்க வேண்டியதை தெரியாது என கூறுவது வழக்கிற்காக பொய்யாக சொல்வது என்றால் சரியல்ல.

5. இந்த வழக்கின் 1 ம் பிரதிவாதி மூலம் 3 ம் பிரதிவாதி நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ரூ77 லட்சம் முதலீடு செய்ததாக எனது பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்கு மூலத்தில் 3 ம் பிரதிவாதி நிறுவனம் தொழிக்கு தேவையான இயந்திரங்களை 2010 ம் ஆண்டில் வாங்கினேன் சொல்லியுள்ளதும் பொய்யானது என்றால் சரியல்ல. வாங்குவதற்கு பணம் கொடுத்தோம். 2008 முதல் 3 ம் பிரதிவாதி தொழிலை 2 ம் வாதி மட்டுமே பார்த்து வந்தார் என பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லியுள்ளது என்றால் சரியல்ல. 1.2.2008 க்கு முன்னர் 2007 ல் நானும் என்னுடைன் சேர்ந்து 6 பேரும் இணைந்து ஏற்படுத்திய கூட்டாண்மை நிறுவன தொழில் நடவடிகைகள் குறித்த ஆவணங்கள் (Business transaction) எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. எனது பிரமாண வாக்கு மூலத்தில் இந்த வழக்கின் 2ம் வாதி 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைகளை கவனித்து கணக்கு விபரங்களை கவனித்தும் நாங்கள் கேட்டுகும் போது ஒப்படைக்கும் கடப்பாடும் ஒப்படைக்க பட்டுயிருந்தாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். 3ம் பிரதிவாதி நிறுவன பங்குதாரர்கள்அவ்வாறு எழுத்து மூலம் ஏற்படுத்தியுள்ளார்களா என்றால் ஆமாம். இந்த வழக்கின் 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் 2ம் வாதியிடம் 3ம் பிரதிவாதி நிறுவனதிடம் ஒப்படைக்க வேண்டும் என ஒரு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது சரி என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாககல் செய்துள்ளேன்.

7. நானும் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியும் 2ம் வாதியிடம் நிற்வாகம் மற்றும் அதன் கணக்குகள் குறித்து ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாககல் செய்துள்ளேன். நான் மேற்படி ஒப்பந்தம் தாக்கல் செய்துள்ளதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி நிறுவனத்தில் எனக்கும் இந்த வழக்கின் 2ம் வாதிக்கும் பங்கு தாரர் அந்தஸ்து இல்லை என 1ம் வாதி கூறுவது சரியா சரியில்லையா என்றால் சரிதான். 2008 ல் நானும் 2ம் வாதியும் எங்களது மனைவிக்காக கூட்டாண்மை நிறுவனத்தை ஆரம்பித்தோம் என்றால் ஆமாம். என்னுடைய பிரமாண வாக்கு மூலததில் 2ம் வாதிக்கு சில உரிமைகளை கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். 2ம் வாதி 3ம் பிரதிவாதி கூட்டாண்மை நிறுவனத்தில் நிறுவன வேலைகளை செய்து சம்பளம் பெற்று வந்தார் என என்னுடைய பிரமாண வாக்கு மூலததில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அதனால் 3ம் பிரதிவாதி நிறுவனத்தில் 2ம் வாதி என்னாலும் என் மனைவி 1ம் பிரதிவாதியாலும் பணியாளராக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வாதி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– M.மேகலாமைதிலி
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.